**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.1125/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுலோச்சனா** | Caste | : |
| Father Name/ Husband Name | : **பரமேஸ்வரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி முன்பு சாட்சியம் எடுக்கப்படுகிறது)
**(24.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தனக்கன்குளம் நேதாஜி நகரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பரமேஸ்வரன் எனது கணவர் ஆவார். கடந்த 17.04.2019 அன்று எனது 2 வது மகன் வினோத்குமாருக்கு திருமணத்திற்காக அழைப்பிதழ் கொடுப்பதற்காக முல்லை நகர் செல்லும் போது எங்கள் நேதாஜி நகரில் அக்சயா கார் கம்பெனிக்கு எதிர்புறத்தில் ரோட்டைக் கடக்கும் போது நானும் எனது கணவர் பரமேஸ்வரனும் மேற்படி ரோட்டை கடந்து சென்ற போது நான் முன்னால் சென்றேன்., முன்னால் வந்த எனது கணவர் மீது திருமங்கலம் டு மதுரை நோக்கி வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது., அப்போது மாலை 6.50 முதல் 7 மணி இருக்கும். நான் பார்த்த போது எனது கணவர் கீழே விழுந்துகிடந்தார். இருசக்கர வாகனம் என் முன்னே கிடந்தது. இருசக்கர வாகனத்தின் பதிவு எண் 7125 என அங்கு உள்ளவர்கள் சொல்ல கேட்டுக்கொண்டேன். இருசக்கர வாகனத்தை ஓட்டியவரை நான் பார்க்கவில்லை. எனது கணவருக்கு பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டு பின்னந்தலையில்

இரத்தம் வழிந்தது. அங்கு இருந்தவர்கள் போன் செய்து திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.1125/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஸ்குமார் | Caste | : |
| Father Name/ Husband Name | : சுந்தரம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி முன்பு சாட்சியம் எடுக்கப்படுகிறது)
**(24.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தனக்கன்குளம் நேதாஜி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பரமேஸ்வரன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 17.04.2019 அன்று மாலை 7 மணியளவில் தனக்கன்குளம் நேதாஜி ரோட்டின் அருகே பாபா கார்ஸ் என்ற கார் கம்பெனி உள்ளது. மேற்படி மெயின் ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பரமேஸ்வரனும் அவரது மனைவி அ.சா.1ம் கடந்து சென்றுவிட்டார்கள். திருமங்கலம் டு மதுரை நோக்கி சென்ற இருசக்கர வாகனமானது பரமேஸ்வரன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது மனைவி கீதா என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். நான் உடனே சம்பவயிடம் சென்று பார்த்த போது பரமேஷ்வரனுக்கு பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்சில் நான் தான்அவரை ஏற்றினேன். திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நானும் உடன் சென்றேன். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் எண் டிஎன் 84 எப். 7125 ஆகும். இரவு 7 மணி ஆனதால் அவரை என்னால்

பார்க்கமுடியவில்லை. மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு பரமேஸ்வரன் இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்து சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.1125/2022**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கீதா** | Caste | : |
| Father Name/ Husband Name | : **சதீஸ்குமார்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி முன்பு சாட்சியம் எடுக்கப்படுகிறது)
**(24.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் தனக்கன்குளம் நேதாஜி நகரில் குடியிருந்து வந்தேன். விபத்தில் இறந்துபோன பரமேஸ்வரன் எனது தாய்மாமன் ஆவார். அ.சா.1 எனது அத்தை ஆவார். கடந்த 17.04.2019 அன்று அ.சா.1 மற்றும் பரமேஸ்வரன் ஆகியோர்களின் சின்ன மகன் வினோத்குமாரின் திருமண அழைப்பிதழை கொடுப்பதற்காக மோனிகா அவன்யா நேதாஜி ரோட்டில் இருந்து எதிர்புறத்தில் சாலையை கடந்து அ.சா.1 சுலோச்சனாவும் பரமேஸ்வரனும் நின்றுகொண்டிருந்த போது திருமங்கலம் டு மதுரை நோக்கி வந்த இருசக்கர வாகனம் எனது மாமா பரமேஸ்வரன் மீது மோதி விபத்து ஏற்பட்டது, அனைவரும் வந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் கூறினார்கள். நான் சம்பவயிடம் சென்று பார்த்த போது எனது மாமாவுக்கு பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சுயநினைவின்றி இருந்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அங்கு இருந்தவர்கள் இருசக்கர வாகனத்தின் எண்ணை எழுதிக்கொடுத்தார்கள். அந்த எண் 7125 ஆகும். நான் பதற்றத்தில்

இருந்ததால் இருசக்க வாகனத்தை ஓட்டியவரை நான்பார்க்கவில்லை. சம்பவம் பற்றி நான் எனது கணவர் அ.சா.2 க்கு போன் மூலம் தகவல் கூறினேன். ஆம்புலன்சில் மூலமாக எனது மாமாவை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு எனது மாமா இறந்துவிட்டதாக கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை